**Most Rev. Dr. A. Stephen**
Bishop of Tuticorin
Tel : 0461 - 2320035 (Off)

Catholic Bishop's House,
82, Great Cotton Road,
Tuticorin - 628 001. INDIA.
E-mail : sthevantuticorin@gmail.com

10.08.2024

சுற்றுமடல் எண் 3/2024

## மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கும் இறைமக்களுக்கும் ஆயர் அவர்களின் சுற்று மடல்

**இறை இயேசுவில் என் அன்பார்ந்த அருட்பணியாளர்களே, அருள்துறவியர்களே, என் அன்பார்ந்த இறைமக்களே இறையேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்!**

கடந்த வாரம் கேரளாவில் வயநாடு பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் பெரும் வெள்ளத்தால் எண்ணற்ற துன்பங்கள் நிகழ்ந்தது. ஏறக்குறைய 350 விலைமதிப்பற்ற உயிர்களை இழந்துள்ளோம். பல்லாயிரக்கணக்கான மக்கள் உடைமைகளை இழந்துள்ளனர். இந்த துயரமிக்க சம்பவங்களில் இறந்த ஆன்மாக்களுக்காக ஜெபிக்கிறேன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எனது ஆழ்நத அனுதாபங்களையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நம் மறைமாவட்ட மக்கள் அனைவரும் இணைந்து உதவிக்கரம் நீட்ட வேண்டுமென விரும்புகிறேன். வரும் 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை நம் மறைமாவட்டத்தின் எல்லா பங்குகளிலும் பிரிக்கப்படும் ஞாயிறு காணிக்கையை இந்த மனிதநேய செயல்பாடுகளுக்கு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மேலும் நமது மறைமாவட்ட இளைஞர் பணி குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய அடிப்படை தேவைகளை நிறைவேற்ற பொருட்கள் சேகரித்து வருகின்றனர். அதற்கும் ஆதரவு அளித்து இந்த புனிதப்பணியை அனைவரும் இணைந்து செயலாற்றிட அன்புடன் வேண்டுகிறேன். பிரிந்த தொகையை முழுவதுமாகப் பாதிக்கப்பட்டோருக்கு அனுப்பிட வேண்டும் என்பதை மனதில் கொள்வோம்.

இந்த மடலை 18.08.2024 இல் எல்லாத் திருப்பலிகளிலும் வாசித்தருள கேட்டுக் கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

அன்புடன் ஆசீரளிக்கும்,

+ Stephen

**மேதகு ஆயர் A. ஸ்டீபன்**
**தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர்**

A. STEPHEN
BISHOP OF TUTICORIN